திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழியோர கிராமங்களுக்கு குடிநீர் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் இதில் திருமங்கலம் பகுதிக்கு சோழவந்தான் பகுதியிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டது. அப்போது 4, 5 கிராமங்களுக்கு தண்ணீர் கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. இப்போது கிராமப் பஞ்சாயத்திலே கேட்டபோது தனியாக அதற்குப் பணம் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். அது அரசுக்குத் தெரியுமா ? அதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துகள் குடிநீர் பெறுவதற்கு என்று சில வரைமுறைகள், நியதிகள் இருக்கின்றன. பஞ்சாயத்திலே பணம் இருந்தால், பணம் கட்டவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இல்லாத கிராமங்களில் அதைப் பரிசீலித்து அரசு ஆவன செய்யும்.

சாத்தான் குளத்தில் காற்றாலை மூலம் மின் உற்பத்தி

464—(*வினா எண். 12712) திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வறட்சிப் பகுதியாகிய சாத்தான்குளம் பகுதியில் காற்றாலைகள் நிறுவி மின் உற்பத்தி செய்யும் திட்டம் அரசினால் பரிசீலிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதியில் காற்றில் வேகத் தன்மை ஆராயப்பட்டபின் காற்று மின்னாக்கி நிறுவுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பகுதியில் காற்றின் வேகத்தன்மையை ஆராய்ந்த பிறகு காற்று மின்னாக்கி நிறுவப்படும் என்று சொன்னார்கள். சாத்தான்குளம் பகுதி கடற்கரையோரப் பகுதியாகவும், காற்று அதிகமாக வீசுகின்ற இடமாகவும், திறந்தவெளி பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினால் காற்று மின்னாக்கி நிலையத்தை அந்தப் பகுதியிலே அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காற்றாலை எங்கெங்கு அமைப்பது என பதை அரசு ஆராய்ந்து கொண்டு வருகிறது. அந்த வகையிலே தூத்துக்குடி பகுதியிலே இப்போது, மரபு சாரா எரிபொருள் சக்தி' துறையின் மூலமாக ஒரு கோடி ரூபாய் நிதியுதவி பெற்று 55 கிலோவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய 10 காற்றாலைகள் நிறுவப்பட்டு அவை பயன்பட்டுக் கொண்டு வருகின்றன.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி பகுதியில் முல்லக் காட்டில் இயங்கி வருகின்றன. ஆலை மிகச் சிறப்பாக இயங்கி வருவதாக அறிந்திருக்கிறேன். அதே நேரத்தில் சாத்தான் குளத்தில் எந்தவிதமான தொழிலும் இல்லை. வறட்சியான பகுதியாகவும் இருக்கிறது. அங்கேயுள்ள மக்கள் நலன் பெறும் வகையில், தொழில் வாய்ப்பு பெறும் வகையில் இந்த காற்று மின்னாக்கி நிலையம் ஒன்றை சாத்தான்குளத்தில் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளத்திற்கு அருகிலே கஸ்தூரி ரங்காபுரம் என்ற இடத்திலே அளவு மானி 28—7—1986-லே நிறுவப்பட்டிருக்கிறது. 2, 3 ஆண்டுகளில் ஆராய்ந்த பிறகு, காற்று வீசும் தன்மைகளைக் கணக்கிட்டு, பிறகு அந்த காற்று மின்னாக்கி நிலையம் நிறுவுவது பற்றி ஆராயப்படும்.

தஞ்சாவூரில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம்.

465—(*வினா எண். 2452) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் கூடுதல் மாவட்ட நீதிமன்றம் துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.